//

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.8/2017**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்.,மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கோபாலகிருஷ்ணன் | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**பி.வா.சா.1 : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி கோவிலின் தர்ம பரம்பரை அரங்காவலர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். புல எண்.349/2–ற்குண்டான புல வரைபடம் உண்மை நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகவும், அடங்கல் 15 வரிசை உண்மை நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகவும், 22.07.2013ம் தேதியிட்ட இணை ஆணையர் இந்து சமய அறநிலையத்துறை அவர்களுக்கு 1ம் பிரதிவாதி கொடுத்த புகார் மனு நகல் அலுவலக நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகவும், 26.09.2016ம் தேதியிட்ட செயல் அலுவலர் அவர்கள் புஞ்சைபுளியம்பட்டி காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கொடுத்த புகார் மனு நகல் உண்மை நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகவும், 27.09.2016ம் தேதியிட்ட புஞ்சைபுளியம்பட்டி காவல் துறையினர் கொடுத்த மனு ரசீது அசல் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா தள்ளுபடி ஆக வேண்டுகிறேன்.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கானது குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/ her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.26 15:49:03 +0530

District Munsif